Judicial Form No. 53
[See Rule 42]
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
.............
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,PAPPIREDDIPATTI

| | |
|---|---|
| Case No. | **CC.No. 189/2022** |
| Deposition of | PW4 |
| Name | : சுலோசனா |
| Father's Name/Husband Name | : சின்னராஜ் |
| Village | : நடுர் |
| Taluk | : பாப்பிரெட்டிப்பட்டி |
| District | : தருமபுரி |
| Religion | : Hindu |
| Age | : 50 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **15.07.2026**

**எதிரி ஆஜர் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**<u>சாட்சி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்.</u>**

**சாட்சி மனுவின் பேரில் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

சம்பவ தேதி, மாதம் ஞாபகமில்லை.

அ.சா.1 எனது அக்கா மகன் ஆவார்.

அ.சா.1 மீது காவல் நிலையத்தில் நிறைய வழக்குகள் உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

அ.சா.1 கடைசியாக அ.பள்ளிப்பட்டி காவல் நிலையத்திற்கு சென்று காவலர்களை குத்துகோளால் குத்த சென்று கைதாகி சிறையில் இருந்தார் என்றால் சரிதான்.

எனது முதல் விசாரணையில் அ.சா.1 ஐ யார்யார் எங்கு அடித்தார் என்று கூறிவில்லை என்றால் சரியல்ல, கூறினேன்.

போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள்.

போலீசார் விசாரணையிலும் மேற்கண்ட சாட்சியத்தைதான் கூறினேன். அதை எழுதி கொண்டார் என்னிடம் படித்தும் காண்பித்தார்கள்.

அ.சா.1 எனது அக்கா மகன் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு படித்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு என் முன்னர் கையொப்பம் செய்தார்.**

**நீதித்துறை நடுவர் பாப்பிரெட்டிபட்டி.**